சில பகுதிகளில் மழை இல்லாமலும் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன இடங்கள் மழை பெய்யாத இடங்கள் என்றுதான் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, வறட்சிக் காலங்களில் தனிப்பட்ட விவசாயிகள் சொந்தமாகக் கிணறுகள் வெட்ட அரசு உதவி பெறுவதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. அரசாங்க உதவி கொடுப்பதில், விவசாயக் கிணறுகள் 600 அல்லது 900 அடிக்குள் விவசாயக் கிணறுகள் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. மாநிலத்தின் நிலத்தடி நீர்த்துறை டார்க் ஏரியா, கறுப்புப்பகுதிக்கு இந்தக் கடன் கொடுக்க முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வசதியானவர்கள் மட்டும் கிணறுகள் வெட்டும் சூழ்நிலையும், பணம் இல்லாதவர்கள் கிணறு வெட்ட அரசாங்கக் கடன் பெற முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது. ஆகவே இந்த இரண்டு முறைகளையும் தளர்த்த அரசாங்கம் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி.சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் அளிக்கும் திட்டம்

85— (*வினா எண்.18669) திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால் எல்லா விவசாயிகளுக்கும் மானிய விலையில் விதைகளை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கும் மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கும் முறையே 25, 33 1/3 விழுக்காடு வீதத்தில் மானியம் அளித்து விதைகள் விநியோகிக்கப்பட்டன. இதற்காக 1983-84—ஆம் ஆண்டுக்கு அரசு ரூ 50 இலட்சத்தை வேளாண்மை இயக்குநருக்கும், ரூ. 30 இலட்சத்தை எண்ணெய் வித்து இயக்குநருக்கும் ஒதுக்கியது.

திரு. தி.அன்பழகன்: தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தினால், வறட்சி வெள்ளம் போன்றவைகளால் பாதிக்கப்படுகிற எந்த விவசாயியாக இருந்தாலும் காலத்தில் பயிர் செய்ய விதைகள் கிடைப்பதில்லை, எனவே பருவத்திலே பயிர் செய்ய முடியாமல் போய் விடுகிறது. ஆகவே பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று பாராமல் அனைவருக்குமே மானிய விலையில் விதைகள் வழங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா

மாண்புமிகு டாக்டர், கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அனைவரையும் ஒரே கணிப்பில் வைத்துப் பார்ப்பது முறை யற்றது. பாதிக்கப்படுகிறவர்கள் மிகச் சிறு விவசாயிகள், சிறு விவசாயிகள். ஆகவே அவர்கள்பால்தான், அரசாங்கம் அக்கறை யோடு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, சிலயிடங்களில் விதைகள் வழங்குவது, உரிய காலத்தில் வழங்காத காரணத்தால், தாமதமாக வழங்கப்படுகிற காரணத்தால் சிக்கல்கள் ஏற்படு கின்றன, ஆகவே இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர். கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உரிய காலத்தில் வழங்குவதுதான் சிறந்தது. அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் அதை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று விவசாயிகளுக்கு விதைகள் உரங்கள் போன்றவற்றிற்கு மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் விதைகள் உரங்கள் வழங்குவதில் கொடுக்கக்கூடிய மானியம் ஒரு சிலயிடங்களில் நேரடியாக விவசாயிகளைச் சென்ற டைவதில்லை. ஆகவே மாற்று யோசனையாக மானியம் தருவதை நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக விலையைக் குறைத்துக் கொடுத்து நேரடியாக விவசாயிகள் அந்த நன்மையை அடைவ தற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாக விலையைக் குறைப்பதற்கு வழி இல்லை. பாதிக்கப்படுகிற நேரத்தில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு அரசு உதவுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆளும் கட்சிவரிசையில் இருக்கிற இரண்டு சட்டமன்ற உறுப் பினர்கள் கூறியதுபோல் சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் தருகிறபோது தானாகவே அங்கு அதிகமான ஊழல்கள் வந்து விடுகின்றன. கிடைக்கவேண்டிய உதவி சிறு விவசாயி களுக்கு கிடைக்கமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அதைத் தவிர்ப்பதற்காக குறைந்த மானியமானாலும் எல்லா விவசாயிகளுக்கும் விதைகள் என்றால் இந்த விலை என்றளவில் நிர்ணயித்தால் ஊழல் இருக்காது, எல்லோருக்கும் கிடைக்கவும் கிடைக்குமே, ஆகவே இதை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பசிக்கக்கூடியவர்களுக்கு உணவு தர முடியுமே தவிர அஜீரணத்தில் இருப்பவர்களுக்கு உணவு தருவது நல்லதல்ல,

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மழை பெய்யாமல் தரிசாகக் கிடக்கக்கூடிய பகுதியில், பின்னால் மழைபெய்துமுளைத்துப்போகிற அந்தப் பகுதியில்உள்ளவிவசாயி களுக்கு, சிறு விவசாயிகள் பெரிய விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயிகளுக்கும் குறைந்த விலையில் விதைகள் கொடுத்துதவ அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அனைத்து விவசாயிகளுக்கும் என்ற அளவுகோல் சரியற்றது, முறையற்றது, நியாயமற்றது.

கோவை வேளாண்மை பொறியியல் துறையிலுள்ள கிணற்றிற்குத் துளைபோடும் இயந்திரம்

(68*வினா எண். 19114) திரு எம். ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை நிர்வாகத்தில் இயங்கும் கிணற்றிற்கு போர் போடும் இயந்திரம் பழுதடைந்துள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) இதனால் விவசாயிகளின் தோட்டக் கிணறுகளை போர் போட முடியாமல் அவதியுறுவது அரசு அறியுமா?

(இ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) பழுதாக இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் போர் போடும் இயந்திரம் பழுதடையவில்லை என்று குறப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியில் 'ஸைட் போர்' போடுவதற்கு இயந்திரம் வேண்டுமென்று சொல்லி விவசாயிகள் மனு செய்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. பழுதடைந்துள்ளது இயந்திரம் எனவே கொடுக்கமுடியாது என்று என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் அமைச்சர் அவர்கள் இயந்திரம் பழுதாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கக்கூடிய தகவல் தவறாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படியிருந்தாலும் கூட, உடனடியாக விவசாயிகளுக்கு 'ஸைட் போர்' போடுவதற்கு இயந்திரம் வேண்டும் என்று கேட்கக்கூடிய நேரத்தில் அதை உடனடியாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS